மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 260—திரு. ஜெ. பாலகங்காதரன். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

260—

சிவகாசியிலுள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்குக் கட்டிடம்.

* 3324. திரு. ஜெ. பாலகங்காதரன்;

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிவகாசியிலுள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றத் திற்குக் (Judicial Magistrate Court) கட்டிடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிவகாசியில் மதுவிலக்கு வழக்குகளை விசாரிக்கும் முகத்தான் 1982 ஆம் ஆண்டு குற்றவியல் நீதிமன்றம் தற்காலிகமாக நிறுவப்பட்டது. இந்த நீதிமன்றம் நிரந்தர மாக்கப்பட்ட பின், கட்டிடம் கட்டுவது குறித்து அரசு பரிசிலிக்கும்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேளை தவறான தகவல் வந்திருக்குமோ என்று எண்ணுகிறேன். ஏனென்றால் நான் அதே பாரிலேதான் வழக்கறிஞராகப் பணியாற்றி இருந்து இப்போது சட்டமன்ற உறுப்பினராக ஆகியிருக்கிறேன். இப்போதுள்ள அதே கோர்ட்டிற்கு நான் சென்று கொண்டிருக் கிறேன். அங்கே நிரந்தர ஜுடிஷியல் மாஜிஸ்டிரேட் கோர்ட் ஒன்று ஏற்படுத்தி 1989ஆம் ஆண்டிலேயிருந்து அது ஏற்பட்டு விட்டது. மேலும் அந்த கோர்ட்டானது கிட்டத்தட்ட 3 ஆண்டுகளாக உயர்நீதிமன்றத்தால் அந்தக் கட்டிடத்தை விட்டு வெளியேற்றப்படும் சூழ்நிலை ஏற்பட்டும் அந்த உத்தரவை யும் மீறி அங்கேயே நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது குறித்து பரிசீலனை செய்து உடனடியாகக் கட்டிடம் கட்ட ஏற்பாடு பண்ணுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–40

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், ஒன்று, உயர்நீதி மன்றத்தினுடைய அடிஷனல்

1992 மார்ச் 19]

ரிஜிஸ்ட்ரார் (அட்மினிஸ்ட்ரேஷன்) திரு. கே. ஏ. வீராசாமி அவர்கள் அளித்த தகவல. அதுபோல நம்முடைய உள்துறை செயலாளர் அவர்கள் அளித்த தகவல். ஆக இரண்டு தகவல்களின் அடிப்படையில் அங்கு தற்காலிகமாக நிறுவப்பட்ட நீதிமன்றம் என்று குறிப்பிட்டேன். அதுபோல் 1988ஆம் ஆண்டு அது அப்கிரேடு செய்யப்பட்டு புரோஹிபிஷன் அஃபன்ஸஸ் மட்டுமல்லாமல் சிவகாசி சரகத்திலே இருக்கின்ற எல்லா வழக்குகளையும் விசாரிக்கின்ற அளவிற்கு அப்கிரேடு செய்திருக்கிறார்கள். என்பது தான் எனக்கு கிடைத்த தகவல். எனவே தான் அது நிரந்தர கோர்ட் அல்ல. If is a special court. It is a not Permenent court.) என்று உயர் நீதிமன்ற ரிஜிஸ்ட்ராரும் சொல்கிறார். உள்துறை செயலாளரும் சொல்கிறார். அந்த தகவலைத் தான் மாண்புமிகு உறுப்பினருடைய மேலான கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியைப் பொறுத்தமட்டிலே கிட்டத்தட்ட சாத்தூருக்குச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொன்னது போல அந்த ஸ்பெஷல் கோர்ட் இல்லை என்றால் சாத்தூருக்குத் தான் செல்லவேண்டும். ஆனால் இங்கிருந்து செல்லும் வழக்குகள் தான் அதிக அளவு உள்ளது. அதுமட்டுமல்லாமல் சிவில் வழக்குகள் என்று எடுத்துக் கொண்டாலும் சாத்தூருக்குச் செல்ல வேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. அங்கே சாத்தூரிலே நடைபெறுகின்ற வழக்குகளிலே கிட்டத்தட்ட 80 விழுக்காடு சிவகாசியைச் சேர்ந்த வழக்குகள் நடைபெறுகின்றன. அதே போல குற்றவியலை எடுத்துக் கொண்டாலும் சிவகாசியைச் சேர்ந்த. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பாலகங்காதரன், நீங்கள் அதை நிரந்தரக் கோர்ட் என்று சொன்னீர்கள். ஏற்கனவே இருந்த தற்காலிக கோர்ட்அப் கிரேடு செய்யப்பட்டது என்று அமைச்சர் சொல்கிறார். இப்போது உங்களுடைய வாதத்தின்படி பார்த்தால் அது ஸ்பெஷல் கோர்ட் என்கிறீர்கள். அப்படியானால் முதலில் நீங்கள் கேட்டது தவறான தகவலா ? இந்த இரண்டு அடிப்படையிலேதான் இப்போது இந்தக் கேள்விக்கு விடையே வரும். அது நிரந்தர கோர்ட் என்றால் கட்டப்படும் என்கிறார். அதை முதலிலே தற்காலிக கோர்ட் என்று சொன்னார்கள். நீங்கள், இல்லை நிரந்தரமாக்கப்பட்டுவிட்டது என்று சொன்னீர்கள். இப்பொழுது திரும்பவும் உங்களுடைய கேள்வியில், அந்த ஸ்பெஷல் கோர்ட் இல்லையென்றால் என்று நீங்கள் ஆரம்பிக்கின்றபோது அது தற்காலிக கோர்ட் என்று தான் ஆகிறது. நீங்கள், அமைச்சருக்குத் தவறான தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிவிட்டு இப்போது நீங்கள் சொன்ன தகவலையே திருத்திக்கொள்கிறீர்கள். ஆகவே அந்தச் சொல்ல வேண்டும். நான் திருத்திக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு நீங்கள் கேள்வியை ஆரம்பிக்க வேண்டும்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன தகவலின் அடிப்படையில் நான் திருத்திக்கொள்கிறேன். இவ்வாறு இருக்கும்போது அங்கே நிரந்தர கோர்ட்டை ஏற்படுத்தி—அங்கே இப்போது இருக்கும் கோர்ட்டிலே ஏற்கனவே ஒரு வதந்தி நிலவுகின்றது. பேய்களும், ஆவிகளும் நிலவி வருகிறது என்று. அந்த வதந்தியினால் அங்கே இருக்கும் எந்த மேஜிஸ்ட்ரேடுகளும் ஒழுங்காக ரிடையர் ஆனது இல்லை. எல்லோருமே ரிடையர் ஆவதற்கு முதல் நாளே சஸ்பெண்டு செய்யப்பட்டு வீட்டிற்கு அனுப்பப்படுகிறார்கள். இந்த நிலைமையை மாற்றி உடனடியாக அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு நிரந்தர கோர்ட்டை ஏற்படுத்தி அங்கே கட்டிடமும் கட்டித் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஸ்பெஷல் கோர்ட்டாக இருப்பதன் காரணமாகத் தான் வாடகை கட்டிடத்திலே இருக்கிறது. அது பெர்மனென்ட் கோர்ட் ஆக விரைவிலே நிதிநிலைமைக்கு ஏற்ப அரசு நடவடிக்கை எடுக்கும். அப்போது உறுதியான சொந்தமான கட்டிடம் கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 261—திரு, ஆர், தங்கராஜ், மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்

261—

தென்னூர் அரசினர் மேல்நிலைப்பள்ளிக்கு பிற்பட்டோர் நல விடுதி அமைத்தல்,

*2924—திரு, ஆர், தங்கராஜ்:

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சி மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம் தென்னூர் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்பட்டோர் நல விடுதி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் இல்லை,

திரு, ஆர், தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழ்நாட்டிலேயே ஆண்டிமடம் சட்டமன்றம் தொகுதி மிகவும் வறட்சியான தொகுதியாகும், அங்கு அரசு உதவி பெறுகின்ற தாம்போஸ் ஹையர் செகண்டரி ஸ்கூ